விலை : ரூ 3/50

# இந்து கலா சாரம்

இந்து சமய திங்கள் வெளியீடு

கௌரவ ஆசிரியர் : திரு. ஆர். வைத்தமாநிதி

மலர் : 2 ★ திருவள்ளுவர் ஆண்டு 2021 ஐப்பசித் திங்கள் 5ம் நாள் (22-10-1990) ★ இதழ் : 7.

## எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
## எத்தனை அடியேன் எத்தனை செய்யினும்
## பெற்றவன் நீ குரு பொறுப்பது உன் கடன்



உன்னை துதிப்பவர்களுக்கு
துன்பம் அகலும்
உன்திருவடியை
உருதி என்னும் எங்களை
சரவணபவனே சைலொளிபவனே
திரிபுரபவனே திகலொளிபவனே
பரிபுரபவனே பவம் ஒளிபவனே
விரைந்துவந்து எங்களை காக்க
வேலவா வருக
மந்திர வடிவேல் வருக வருக!

**சாந்தி**
**சமாதானத்திற்காக**
**பிரார்த்திப்போமாக!**

# நமது நோக்கு

மலையக மாணவர்களின்

## கல்வி நிலை!

வானொலியிலும், தொலைக்காட்சியிலும், செய்திப்பத்திரிகைகளிலும் நாளாந்தம், மலையக மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்காக ஏதோவெல்லாம்—எப்படியெப்படியெல்லாம் நடைமுறைப்படுத்தியிருப்பதாகவும், அமுல் நடத்தப்போவதாகவும் செய்திகள் பரவலாக பரப்பப்பட்டபோதிலும்; இவை அனைத்தும் ஏட்டளவிலும், கொள்கையளவிலும் மாத்திரமே செயல்படுகின்றன. ஆயிரத்தில் ஒன்று அல்லது இரண்டுதான் செய்கையளவில் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

மலையக தமிழ் மாணவர்களே இன்று மிகவும் பின்தங்கியநிலையில்—சகல விதத்திலும் புறக்கணிக்கப்படுகின்றனர்.

வருடாவருடம் ஆசிரியர் வெற்றிடங்கள் நிரப்பப்பட்டபோதும் மலையகத்திலுள்ள தமிழ்ப் பாடசாலைகளில் தொடர்ந்தும் ஆசிரியர்கள் தட்டுப்பாடு நிலவிவருகின்றது. கல்வி நிர்வாக சேவையில் மலையகத்தைப் பொறுத்தவரையில், தமிழ் அதிகாரிகளே இல்லையென்றுதான் கூறலாம்!

மலையக—தோட்டப்புற தமிழ் சமுதாயத்துக்கு இப்படியும் ஒரு இருட்டடைப்பா?

குருநாகல் மாவட்டத்தில் தமிழர்கள் பல்வேறு தோட்டங்களிலும் பரந்து வாழ்கின்றனர். இம்மாவட்டத்தில் எத்தனையோ பாடசாலைகளில் அதிமுக்கிய பாடங்களான விஞ்ஞானம், கணிதம், சமயம், போன்ற பாடங்களைப் போதிப்பதற்கு, வருடக்கணக்காக ஆசிரியர்கள் எவரேனும் நியமிக்கப்படாதது வருந்தத்தக்கதாகும். மேலும், இம்மாவட்டத்தின் பல்வேறு தோட்டங்களிலுமுள்ள பெற்றோர்கள் தமது சிறார்களுக்கு போதியளவு கல்வியறிவு கிடைக்கவில்லையே என அங்கலாய்த்தவண்ணமிருக்கின்றனர்.

வாழ்க்கைச் செலவு வானளாவ உயர்ந்துகொண்டிருக்கும் இக்காலகட்டத்தில், அவர்களால் எப்படி நகர்ப்புறங்களில் தமது சிறார்களை அனுப்பி படிப்பிக்க முடியும்?

குருநாகல் மாவட்டமும் மலையகத்தின் ஒரு பகுதியே! அப்படியிருக்க; இம்மாவட்ட தோட்டப்பகுதி பாடசாலைகள் மாத்திரம் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் புறக்கணிக்கப்படுவதேன்?

மலையக தமிழ்த் தலைவர்களும், அமைச்சர்களும், தகுதிவாய்ந்த அதிகாரிகளும்; மேற்படி குறைபாடுகளை நிவர்த்திசெய்து தோட்டப்பகுதிவாழ் தமிழ் சமுதாயத்தின் சுபீட்சமான நல்வாழ்விற்கு வழி வகுப்பார்களா?

## நற்சிந்தனை

நமக்கு வேண்டியது மனிதரைப் படைக்கிற ஒரு மதம்; நமக்கு வேண்டியது எங்கும் மனிதரை உருவாக்குகிற கல்வி; நமக்குத் தேவை மனிதரை உருவாக்குகிற கோட்பாடுகள்.

— சுவாமி விவேகானந்தர்

திருவுருவங்களை கல்லாலும், செம்பாலும்

## அமைத்ததன் காரணம்

திருமுருக கிருபானந்த வாரியார்

உலகில் காணப்படும் பொருள்களில் கல்லில் நெருப்பு அதிகமாக தங்கி இருப்பது கண்கூடு. ஒரு கல்லை மற்றொரு கல்லில் தட்டினால் நெருப்பு உடனே வெளிப்படுகிறது. சில வேள்வி வளர்த்து வேள்வியில் எழும் சிவவொளியை நிறைகுடமாகிய கும்பத்திற் சேமித்து, அக்கும்ப நீரால் நெருப்பு நிறைந்துள்ள கல் விக்கிரகமாகிய கடவுளை நிறுவினார்கள். எனவே சோதிமயமான ஒளியில் ஆற்றல் அக்கற்சிலையில் அமைந்திருக்கிறது. இதனை தம் முன்னோர் கருத்திற் கொண்டே மூலஸ்தானத்தில் அமைந்த தெய்வ உருவங்களை கல்லிலே அமைத்தார்கள்.

ஊருக்கு வெளியே அமைந்துள்ள மின் ஆற்றலை ஊருக்குள்ளே ஒளி பாய்ச்சும் கம்பி செம்பினால் அமைந்திருப்பதை காண்க. செம்புக் கம்பிக்கு மின் பாய்ச்சும் ஆற்றல் உள்ளது. ஆகவே, மூலஸ்தானத்தில் சேமித்துள்ள தெய்வ மின்சார ஆற்றலை ஆன்மாக்களின் உயர்வு கருதித் திருவீதியில் பாய்ச்சுகின்ற உற்சவ மூர்த்தியை செம்பினால் அமைத்தனர் நம்முன்னோர்.

நம்முன்னோர்களின் மதி நுட்பத்தை எண்ணிப் பார்க்கும் போது உள்ளம் உருகுகின்றது. இத்தகைய இந்து மதம் போதித்த உண்மைகளே இன்றைய விஞ்ஞான யுகத்திற்கு வழியமைத்திருக்கிறது. மற்றெல்லா மதங்களிலும் பார்க்க இந்து மதம் அர்த்தமுள்ள மதமாகத் திகழ்வதை யார் மறுக்க முடியும்.

தொகுப்பு கே. யோகமூர்த்தி

## அன்பையும் கருணையையும் போதித்தவர்



# இராமலிங்க வள்ளலார்

**டொறிங்டன் அருள்மிகு திருமுருகன் ஆலயத்தில்**
**அமைச்சர் பி. பி. தேவராஜ் ஆற்றிய உரை**

※ ※ ※

''அனைத்துயிர்களிலும் சமத்துவம் கண்டு அன்பினாலும், கருணையினாலும் சமரச சன்மார்க்க நெறியுடன் வாழும் வழிகாட்டியவர் இராமலிங்க வள்ளலார். இறைவனையே ஜோதி வடிவில் கண்டார். அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை எனப் போற்றினார். தன்னை இயற்கையின் அனைத்து அம்சங்களுடன் இணைத்துக் கொண்டதால் பயிர்களைக் கூட நேசித்தார். மிருகவதைக் கெதிராக மனம் நொந்தார்.''

இவ்வாறு கடந்த 5ந் திகதி மாலை டொறிங்டன் அருள்மிகு திருமுருகன் ஆலயத்தில் அனைத்திலங்கை இந்து வாலிபர் சங்கம் ஒழுங்கு செய்திருந்த இராமலிங்க வள்ளலார் பிறந்ததின விழாவிற் கலந்துகொண்டு உரையாற்றிய இந்து சமய, இந்து கலாசார தமிழ் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் குறிப்பிட்டார். இவ் விழாவை, சங்கச் செயலாளர் திரு. த. மனோகரன் ஒழுங்கு செய்திருந்தார். செல்வி. மு. உதயராணி முத்து வரவேற்புரை நிகழ்த்தினார்.

அமைச்சர் அங்கு தொடர்ந்து பேசுகையில்,

''எல்லோரும் மறந்திருக்கின்ற வள்ளலாரை நினைவுபடுத்துகின்ற திரு. மனோகரனை நான் மனமாரப் பாராட்டுகின்றேன்.'' இந்தியாவில் மூட நம்பிக்கை மலிந்து கிடந்ததோடு, நாடும் அடிமைப் பட்டுக் கிடந்த காலகட்டத்தில் பல பாகங்களிலும் சீர்திருத்தவாதிகள் தோன்றி தமது கருத்துக்களை பரப்பினர். மகாகவி தாகூர், மகாத்மா காந்தி, விவேகானந்தர், ராஜாராம் மோகன்ராய், தயானந்த சரஸ்வதி இராமகிருஷ்ண பரமஹம்சர் போன்றோர் இதே காலத்தைச் சேர்ந்தவர்கள். இந்த காலகட்டத்தில் தென்னாட்டிலே தோன்றி இந்துமதக் கருத்துக்களை புதிய கோணத்திலே கண்டவர் இராமலிங்க வள்ளலார். மிக எளிமையான பாடல்கள் மூலம் தமது கருத்துக்களைப் பரப்பினார். பாரதிக்கு முற்பட்ட காலத்திலேயே, இலகுவான தமிழ் நடையைக் கையாண்டார்.

ஜீவகாருண்ணியம், ஆண் பெண் சமத்துவம், மானிட நேயம் சமரச சன்மார்க்கம் என்பன இவரது கொள்கைகளாக இருந்தன. வள்ளலாருக்கும் ஆறுமுக நாவலருக்கும் இடையில் எழுந்த அருட்பா, மருட்பா விவாதம் பற்றி பல்வேறு கருத்துக்கள் உள்ளன.

**அன்புச்செல்வன்**

ஆனால் இருவரும் இரண்டு விதங்களில் மேம்பட்டவர்கள். இலங்கையில் சைவமும் தமிழும் தழைத்து ஓங்க தன்னை அர்ப்பணித்தவர் ஆறுமுக நாவலர். வெள்ளிக்கார சிந்தனையினின்றும் விடுபட்டு நாம் உயர்ந்த பண்பாடும் கலாசாரமும் மிக்கவர்கள் என வலியுறுத்தியவர்.

அதேவேளை வள்ளலாரும் இறைவனின் மதம் அன்பு என்றும், இறைவன் ஜோதி என்றும் போற்றியவர். இவர்கள் விவாதம் பற்றி நாம் கவலைப்படத்தேவையில்லை. அவர்கள் கருத்துக்களை அவற்றின் ஆழத்தை நாம் புரிந்துகொண்டால் போதும்'' எனக் குறிப்பிட்டார்.

திருவாளர்கள் கா. சிவகுருநாதன், கு. குருசுவாமி வி. தேவராஜ் ஆகியோரும் சிறப்புரை ஆற்றினர். டொறிங்டன் அறநெறிப்பாடசாலை மாணவியரின் பஜனையும் இடம் பெற்றது. அனைத்திலங்கை இந்து வாலிபர் சங்கத்தின் சார்பில் திரு. செ. சுப்பையா நன்றியுரை நிகழ்த்தினார்.

● உலகத்திலுள்ள பொருள்களால் சுகமும் ஏற்படுகிறது; துக்கமும் ஏற்படுகிறது. காரணம் என்ன? அந்தப் பொருள்களுக்கு ஆரம்பமும் உண்டு, முடிவும் உண்டு. புத்தி உள்ளவன் அழியக்கூடிய விஷயங்களில் நாட்டம் செலுத்த மாட்டான்.

# இந்துசமய வளர்ச்சிக்கு தடை என்ன?

# நடைமுறையில் திட்டங்கள் செயல்படுகின்றனவா?

'கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றி மூத்த தமிழ்'

இப்படிப்பட்ட தமிழும், சைவமும் வரலாறு மிக்கது; பெருமை மிக்கதொன்றாகும். இருந்தும் அதற்குறிய சிறிய செயல் முறைகள் நடைமுறையில் செயல்படாமல் இருப்பது பெரும் கவலைக்குறியது.

பெருமை பேசி மகிழ்வுகொள்வோர் பலர். ஆனால் அத்தோடு அவர்களது கடமை முடிந்ததாக பெருமூச்சு விடுகின்றனர்.

ஒவ்வொருவரும் இது விடயத்தில் சிந்திக்க வேண்டும், செயல்பட வேண்டும்.

---

மொழியும் — சமயமும் ஒரு மனிதனின் இரு கண்களெனக்கொள்ள வேண்டும். அப்பொழுது தான் அதனது உண்மையான மதிப்பும், மரியாதையும், பெருமதியும், அத்தியாவசியமும் தெளிவுர விளங்கிடும்.

---

எமது அபிலாஷை, நினைவு, செயல் அனைத்தையும் வெளியிட மொழி அவசியம்; அதையும் சிறப்புற, தெளிவாக, ஏற்ற வகையில் வெளியிட மொழிப் பற்றும் அதில் சிறப்பும் பெறுவது மிக மிக அவசியமானதொன்றாகும். அதேபோல் மனிதன், மனிதனாக வாழ; நெறிமுறையும் நேர்மையும் கொண்டு வையகத்தில் வாழ்வாங்கு வாழ சமயம் எமக்கு முக்கியமானது. தெளிவான சிறந்த சமய அறிவு பெற்றிருந்தால் சாலவும் நன்றாகும். பெரியோர்கள் நம் ஆன்றோர்கள் வாழ்ந்து காட்டிய அந்தவகையான வாழ்வை பெரும் பேரானந்த வாழ்விற்கு இதுவே வழிவகுக்கும் என்பதில் சிறிதேனும் சந்தேகமில்லை.

இப்படிப்பட்ட வழிக்கு எப்படி நடவடிக்கை செயல்முறைத்திட்டங்கள் வகுக்கவேண்டும்?

- தமிழ்மொழியில் சிறந்த பயிற்சி அனுபவம் கொண்ட ஆசிரியர்கள் பரவவேண்டும்.
- சமயப்பற்று, சிறந்த சமயப் பயிற்சி நிறைந்த ஆசிரியர்கள், பூசகர்கள் பெருக வேண்டும்.
- இப்படிப்பட்ட ஆசிரியர்கள், அதிபர்கள் கூடுமானவரை சகல பாடசாலைகளிலும் நியமனம் பெறவேண்டும்.
- இந்து ஆலய பூசகர்கள் சமய சம்பந்தப்பட்ட விடயங்கள் குறித்து கூடிய கரிசனை அக்கரை மேற்கொள்ள வேண்டும்.
- சகலப்பாடசாலைகளிலும் இந்துசமயப் பாடம் கட்டாயப்படுத்தப்பட வேண்டும்.
- பாடசாலை மட்டத்தில் இந்துசமய வளர்ச்சிக்கு நடவடிக்கை எடுப்பதன்மூலமே ஏற்ற பலனை அடைய முடியும்.
- ஆலய மட்டத்திலும் கூட்டு வழிபாடு, பிரார்த்தனை, பூசைகள் ஆகியன அவசியம் மேற்கொள்ள வேண்டும்.
- எமது பெரியார்கள் இது விடயத்தில் ஆக்கப்பூர்வ உதவி ஒத்தாசை நல்க வேண்டும்.

இந்துகலாசார தமிழ் அமுலாக்கல் அமைச்சு இது விடயத்தில் ஆவன மேற்கொண்டு உடன் ஏற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ப. அ. பொன்னம்பலம்

---

# சிந்தனைக்கு சில...

நாம் முதலில் பூஜிக்க வேண்டிய தெய்வங்கள் நம் நாட்டு மக்களே ஆவர். எனவே நாம் ஒருவரோடு ஒருவர் போட்டி, பொறாமை காரணமாக சண்டையிட்டுக் கொள்வதற்குப் பதில், ஒருவரையொருவர் ஆராதிப்போம்.

●

நீங்கள் கடவுளின் குழந்தைகள்! அழியாத பேரின்பத்தின் பங்குதாரர்கள்! புனிதமும் பூரணத்துவமும் பெற்றவர்கள். மண்ணுலகின் தெய்வங்களே, நீங்களா பாவிகள்? அப்படி மனிதனை அழைப்பது தான் பாவம்! அது மனித இனத்தின்மீதே சுமத்தப்படும் பழிச்சொல் ஆகும். நீங்கள் அமரத்துவம் பெற்ற ஆன்மாக்கள்! சுதந்திர ஆன்மாக்கள்! அழியாத திருவருளைப் பெற்றவர்கள்!

●

சகோதரா! நீ அழுவதேன்? மரணமோ, நோயோ உனக்கில்லை. நீ அழுவதேன் சகோதரா! துன்பமோ — துரதிர்ஷ்டமோ உனக்குக் கிடையாது. சகோதரா, நீ ஏன் அழவேண்டும்? மாற்றமோ — மரணமோ உனக்கு விதிக்கப்படவில்லை. நீ ஆனந்தமயமானவன். நீ உனது ஆன்மாவில் நிலைத்திரு.

# இந்துமதம் பெண்களுக்கு அளிக்கும் உயர்ந்த நிலை

— சென்ற இதழ் தொடர்ச்சி —

தொகுப்பு - மலையன்பன்

அவ்விதமே பெண்ணும் ஓர் ஆணுடன் கூடி வாழ்க்கையை நடத்தும்போதுதான் நிறைவான வாழ்க்கையை அடைகிறாள் என்று வேதம் சொல்லுகிறது. யுவதி என்ற சொல்லே இந்தக் கருத்தை வெளியிடுவதை நாம் பார்க்கிறோம். மனிதன் தனியாக வாழ்க்கையைத் தொடங்குகிறான். வேதம் விதிக்கும் சமூகக் கட்டுப்பாடு ஒரு பெண்ணை அவனுக்கு வாழ்க்கையில் மனைவியாகவும், நண்பனாகவும் அளித்து, அவனுடைய முயற்சிகளில் வெற்றியை அளிக்கிறது.

பின் வெளி உலகப் பொறுப்புகளிலும், முக்கியமான சடங்குகளிலும், வீட்டில் நடக்கும் பூஜைகளிலும் கூடப் பெண்ணுக்கு ஏன் சம உரிமையையோ முக்கியத்துவமோ அளிக்கப்படவில்லை என்று சிலர் கேட்கக்கூடும். கணவன்-மனைவி இருவரது பொறுப்பையும் பிரித்துப் பேசும் வேதம், வீட்டுக்குள் நடக்க வேண்டிய காரியங்களின் முழுப்பொறுப்பையும் கணவனுக்கு அளிக்கிறது. இதனாலேயே மனைவி சடங்குகளிலும், மந்திரம் ஓதுவதிலும், யாகங்களிலும், பூஜைகளிலும் கணவனுக்கு உதவியாக இருந்து, அவற்றுக்குத் தேவையான பொருட்களைச் சேகரித்துக் கொடுப்பதிலும், சமைத்துக் கொடுக்க வேண்டியவற்றைத் தயார் செய்வதிலும், அதிதிகளுக்கு அளிக்க வேண்டிய உணவைச் சமைப்பதிலும் ஈடுபடுவதே குழப்பமற்ற நிலையை அளிக்கும் என்று வேதம் கருதுகின்றது. இந்தக் காரியங்களையும் அவளே மேற்கொள்ள வேண்டுமானால், எந்தக் கணவனும் வீட்டைவிட்டு வெளியே ஓர் அடிகூட எடுத்து வைத்துப்போக முடியாது.

இதனாலேயே அந்தக் காலத்தில் முனிவர்களும் கூடப் பத்தினிகளுடன் வாழ்ந்ததை நாம் பார்க்கிறோம். அவர்கள் தமது கணவரின் தேவைகளைச் செய்துகொடுத்தது மட்டுமின்றி, குருகுலங்களில் சீடர்களைப் பேணும் தாயின் பொறுப்பையும் எவ்வளவு அழகாகச் செய்துவந்தார்கள் என்பதையும் நாம் பார்க்கிறோம். 'ஒரு மனிதனின் வெற்றிக்கு அவனுடைய மனைவி தரும் ஒத்துழைப்பே முக்கியமான காரணம்' என்று ஒரு வாசகம் மேலைநாடுகளில் நின்று நிலவுகிறது. இது வேதகாலத்திலேயே நடைமுறையில் இருந்து வந்திருக்கிறது. ரிஷிபத்தினிகளின் ஒத்துழைப்பு இல்லாமல், இத்தனை உயர்ந்த தத்துவ நூல்கள் எழுதப்பட்டிருக்க முடியாது. அந்தப்பணியின் வெற்றியை எதிர்காலத்துக்கு அழைத்துச் சென்ற உன்னதமான சீடர்களும் உருவாகி இருக்க முடியாது. ஆக வீட்டில் நடக்கும் காரியங்களுக்கும், வெளியில் நடக்கும் காரியங்களைப் போலவே, முக்கியமான பொறுப்பும் பெருமதிப்பும் இருந்து வந்திருக்கிறது. அதனால் ஆண்-பெண் இருவரிடையே ஏற்றத்தாழ்வு கற்பிக்கப்பட்டது என்ற எண்ணத்துக்கே இடமில்லை.

இல்வாழ்க்கை என்பது தியாகம், அன்பு ஆகிய இரண்டு முக்கியமான தூண்களின்மேல் கட்டப்படுவதாகும். அதுவரை தான் வாழ்ந்துவந்த வீட்டில் தனக்குக் கிடைத்த சௌகரியங்கள் அனைத்தையும் துறந்து, கணவனும் அவனுடைய வீட்டாருமே வாழ்க்கையில் முக்கியம் என்று எண்ணிப் புகுந்த வீட்டுக்கு வரும் பெண், தியாகத்துடனேயே வாழ்க்கையைத் தொடங்குகிறாள். பிறகு கணவனுக்காகவும், குழந்தைகளுக்காகவும் தனது வாழ்க்கையை அர்ப்பணித்துத் தியாகத்தின் சின்னமாக விளங்குகிறாள். இந்தப் பண்பை விவாக மந்திரம் எடுத்துச் சொல்லி, இல்வாழ்க்கையை ஆரம்பித்து வைக்கிறது.

> சப்தபதி மந்திரம் இணைபிரியாத ஆகாயம், பூமி, ருக், சாமம் ஆகியவைகளைக் காட்டி, இணைபிரியாத தாம்பத்தியவாழ்க்கையின் அடிப்படையை வலியுறுத்துகிறது. ஓர் அதர்வண வேத மந்திரம், தனது ஜோடி பிரிந்தால் உயிரையே விட்டுவிடும் சக்கரவாகப் பட்சிகளையே தம்பதியருக்கு உதாரணமாகக் குறிக்கிறது.

இல்வாழ்க்கையின் இன்னொரு முக்கியமான அடிப்படை அன்பு, கணவன் என்ற ஆணை அதுவரையில் பார்த்தே இராத பெண்ணான மனைவி, இல்வாழ்க்கையைத் தொடங்கிய பிறகு கணவனிடம் தனியான அன்பைச் செலுத்த ஆரம்பிக்கிறாள். இப்படி வயதுக்கேற்பத் தோன்றும் பருவ ஆசைகளும், மோகமும், காமமும் இதைப் பாதிப்பதில்லை. இல்வாழ்க்கையில் வயது முதிர முதிர நண்பர்களாகவே தொடரும் தம்பதியரிடையே இந்த அன்பு அழியாத மங்காத உறவாக வலுப்பெறுகிறது. விவாக மந்தி

(தொடர்ச்சி 17ம் பக்கம்)

# அறத்துக்கும் - மறத்துக்கும் இடையில் நடந்த முதல் போர்!

'பதினான்கு ஆண்டுகள் ஆரண்ய வாசம் செய்ய வேண்டும்' என்று கைகேயி கட்டளையிட்டபோது, சீதாதேவி ஸ்ரீராமனுடன் செல்வாள் என்று நினைத்திருந்தால் இராமாயணமே உருவாகியிருக்காதல்லவா?

ஸ்ரீராமன் மட்டும் ஆரண்யவாசம் செய்து விட்டு திரும்பியிருக்கலாம்-மீண்டும் அயோத்தியை ஆண்டிருக்கலாம்! இவ்வளவு சுலபமான விஷயமாக இருந்திருந்தால், ஒரு 'அவதார புருஷனாக' மகாவிஷ்ணு இந்த அவனியில் அவதரித்திருக்க வேண்டாமல்லவா? பல நேரங்களில், 'அழகான மனைவி' ஆபத்தான விஷயமாகி விடுகின்றது! அதில் அன்னை சீதாதேவி மட்டும் விதிவிலக்கல்ல! அழகான மனைவி அம்பலத்திற்கு வந்தால்? ஆமாம்! எல்லோரும் காணும் வகையில் அவளை கானகம் வரையில் அழைத்துச் சென்றதால்தானே இத்தனை விபரீதங்களும் நடந்தன?

ஆரண்யத்திற்குள் நுழைந்ததுமே சீதாதேவியின் அழகு வினை விதைக்க ஆரம்பித்து விட்டது! சீதையின் அழகில் முதன்முதலாக மயங்கிய அரக்கன் இராவணன் அல்ல விராதன் என்பவனாவான்.

யார் இந்த விராதன்?

விராதன் என்பவன் பூர்வ ஜென்மத்தில் கந்தர்வனாக-குபேரனின் பணியாளனாக இருந்தவன். ஒருநாள் தன்னுடைய கடமைகளை அலட்சியப்படுத்தி, அகந்தையில் மயங்கிக் கிடந்தான். அவனது அலட்சியப் போக்கைக் கண்ட குபேரன், ''நீ அரக்கனாக மாறக்கடவாய்!'' என்று சாபம் கொடுத்து விடுகிறான். அதைக் கேட்டு நடுநடுங்கிப்போன விராதன், தன்னுடைய தவறினை உணர்ந்து, ''பிரபோ! அறியாது பிழை செய்து விட்டேன். என்னை மன்னித்து எனக்கு சாப விமோசனம் காட்டுங்கள்'' என்று பணிந்து வேண்ட, குபேரனும், ''பகவான் ஸ்ரீமந் நாராயணனின் இராமாவதாரத்தில், அவருடைய தாள் உன்மீது ஸ்பரிசிக்க, நீ சாபம் நீங்கப் பெறுவாய்!'' என்று விமோசனம் அளித்தான்.

இவ்வாறு குபேரனால் சாபம் பெற்ற விராதன், உயிர்களையெல்லாம் அழித்துத் தின்னும் கிளிஞ்சன் என்னும் அரக்கனுக்கு மகனாகப் பிறந்தான். ஒரு இலட்சத்து இருபத்தி ஐயாயிரம் யானைகளின் வலிமை பெற்றவனாகத் திகழ்ந்தான். 'வெய்யோர் யாரே விரவிராதன் துணை வெய்யோர்' என்று மாரீசனால் போற்றப்படும் அளவுக்கு வீரமும், தீரமும் நிறைந்தவன்.

இத்தனை பராக்கிரமங்கள் நிரம்ப பெற்ற விராதன், தண்டக வனத்தைத் தன் இருப்பிடமாகக் கொண்டு, அட்டகாசங்கள் புரிந்து வாழ்ந்து வந்தான்.

பின்னாளில் இராவணன் செய்யப் போகும் சீதையைக் கவர்தலாகிய செயலை, அவனுக்கு முன்பாகவே செய்யப்போகும் விராதன், சீதையோடும் தம்பி இலட்சுமணனோடும் இராமன் தண்டக வனத்திற்குள் நுழைவதைக் கண்டதும், எதிரில் வந்து நின்று மறித்து அவர்களை நடுத்தி, சீதையைக் 'கவர்ந்து கொண்டு, வான் வழியில் விரைவாகச் செல்லலானான்.

அதுகண்டு சினந்த இராமனும், இலட்சுமணனும் வில்லில் நாணேற்றி விராதனை நோக்கிக் குறி வைத்து ''அடேய், நில்! எங்கே ஓடப் பார்க்கிறாய்?'' என்று கேட்டனர்.

**தொகுப்பு - ஆர். வி.**

விராதன் அலட்சியமாக நகைத்தபடி, ''அற்ப மனிதர்களே! நான் பிரம்மாவினால் அழியாத வரம் பெற்றவன். என்னை யாராலும் வெல்ல முடியாது. மாறாக எவரையும் வெல்லும் சக்தி எனக்கு உண்டு. உங்களுக்கு உயிர்ப்பிச்சைத் தந்தேன். இவளை என்னிடமே விட்டுவிட்டு, நீங்கள் பிழைத்துப்போங்கள்!' என்று ஆணவத்துடன் கூறினான்.

அவன் கூறியதைக்கேட்டு புன்முறுவல் பூத்த இராமன், 'இவன் ஆணவத்துடனும், அறியாமையுடனும் பேசுகிறான். இவன் வலிமை இழந்து அழியப் போகின்றான்' என்று எண்ணி, வில்லின் நாணினை இழுத்து ஒலி எழுப்புகிறான். இடியென முழங்கிய நாணொலி கேட்ட விராதன், சற்றே சீதாபிராட்டியை விட்டு விலகி நின்றவனாக வெகுண்டு, தன்னுடைய சூலாயுதத்தை இராமனின் நெஞ்சினை நோக்கி வீசினான். தன்னை நோக்கி ஏவப்பட்ட சூலாயுதத்தை இராமன் தன் கணையினால் தாக்க பின்னர் நடக்கப்போகும் விராதனின் அழிவை உணர்த்தும் தூமகேதுபோல், சூலாயுதம் இரண்டாகப் பிளந்து கீழே வீழ்ந்தது.

சூலாயுதம் இற்று விழுந்தது கண்ட விராதன்' மலைகள் அனைத்தையும் பெயர்த்து இராமனை நோக்கி வீச, அவைகளும் இராமனின் கணைகளால் பொடிப்பொடியாகச் சிதறி, விராதன் உடலிலேயே

(தொடர்ச்சி 17 ம்பக்கம்)

# கலாசாரமும் காவலர்களும்

## ஆய்வுக் கண்ணோட்டம் – 2

நமது இந்து பெண்களில் சிலர் ஆலயத்திற்குக் கூட அரை குறை ஆடைகளை உடுத்தி வருகின்றார்கள். ஆலயம் என்பது புனிதத்தன்மைமிக்க ஒன்று என்பதை மறந்து கவர்ச்சி காட்டி உணர்வை தூண்டி விடுகின்றனர். ஆலயத்தை சினிமாவாகவும், உல்லாச விடுதியாகவும் நினைப்பவர்கள் ஆலயத்திற்கு வராமல் விடுவது சாலச் சிறந்தது. இறைவனின் அருளைப்பெற வேண்டிய அவர்கள், அதற்குப் பதிலாக அதே இறைவனது சாபத்தைப் பெற வேண்டியவர்களாகி விடுகின்றார்கள். இதுமட்டுமல்ல கலாசார வைபவங்கள். மத சம்பந்தமான வைபவங்கள் போன்றவற்றிற்கு வருகை தரும் போதும் கவர்ச்சி உடைகளை அணிந்தும், அரை குறை ஆடைகளையணிந்தும் வருவது பெண்களுக்கு சிறந்த பண்பல்ல. நற்குடி பெண்கள் ஒருபோதும் இத்தகைய அநாகரீக முறையில் செயல்படமாட்டார்கள்.

ஜெய்நிவேத்

ஆண்களோ, பெண்களோ தமது ஆடை அணிகளன்களை தெரிவு செய்து அணிந்து கொள்வது தமது விருப்பு வெறுப்புகளே! இது அவர்களது தனிப்பட்ட சுதந்திரமே. ஆயினும்; இடத்திற்கு தகுந்த மாதிரி, தமது பாரம்பரியத்திற்கு ஏற்றமாதிரி, தம்மை தாமே உணர்ந்து தமது உடைகளை அணிய முற்படுவது மற்றையவர்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்குவத்தோடு நல்ல சமுதாயத்தின் மத்தியில் இவர்களுக்கென ஒரு தனி மரியாதையும் மதிப்பும் ஏற்பட வழிவகுக்கின்றது.

சீர்திருத்தவாதிகள் சிலரதும், கலாசாரத்தைப் பற்றி சமூகத்திற்கு எடுத்தியம்பி முன்னோடியாக விளங்கும் ஒரு சில பிரஜைகள் தாம் பெற்றெடுத்த பெண்கள் அரைகுறையாகவும், அலங்கோலமாகவும், கவர்ச்சியாகவும் உடுத்திக் கொண்டு சமூதாயத்தின் மத்தியிலும், கலாசார, மத சம்பந்தமான வைபவங்களிலும பங்கேற்பது வியப்புக்குரியதும், கண்டனத்திற்குரியதும் அதே வேளை மிகவும் கவலைக்குரிய விடயமுமாகும்.

ஒரு கிறிஸ்தவ மத ஊர்வலத்தை அவதானிக்கும் போது அவ்வூர்வலத்தில் கிறிஸ்தவ கீதங்கள் ஒலிக்கின்றன. ஜெபம் படிக்கப்படுகின்றது. மாணவ மாணவியர்கள் சீருடையில் அவர்களுக்கேற்ற விதத்தில் வாக்கியங்களை வாசிக்கின்றார்கள். ஒழுக்கம் பேணப்படுகின்றது. அமைதியுடன் அநேகமாக ஒவ்வொரு கிறிஸ்தவரும் ஊர்வலத்தில் பங்கேற்றுவதுடன் தமது மதத்தையும், மரபையும் அத்தருணத்தில் உயிரினும் மேலாக கருதி கிறிஸ்தவன் என்பதை ஏனைய மதங்களுக்கு உணர்த்தி விடுகின்றனர்,

அதேபோன்று, பௌத்தர்கள் தமது ஊர்வலத்தில் அவர்களுக்கே உரிய கலாசாரத்தை மாத்திரமே பின்பற்றி கண்டிய நடனத்துடன், பெரஹரா போன்ற மத ஊர்வலங்களை கலாசார மரபை மீறாமல் தொடர்ந்தும் பின்பற்றி வருகின்றார்கள்.

முஸ்லிம் மதத்தவர்கள் மத சார்பான ஊர்வலங்களை நடத்துவதை கேள்விப்படவில்லை.

---

ஒருவர் தமது கலாசார மரபுகளை வளர்க்க முற்படாவிட்டாலும் பரவாயில்லை; இருக்கின்ற கலாசார மரபுகளையாவது மேலும் மேலும் உருக்குலைந்து விடாமல் பேணிப்பாது காத்துக் கொள்ளவாவது முயலல் வேண்டும்.

கலாசாரமறுமலர்ச்சிக்குஉறுதுணையாக இருந்து உதவ முடியாவிட்டாலும் பரவாயில்லை, வளர்ச்சிக்காக பாடுபடுபவர்களுக்கு முட்டுக்கட்டையாக இராது ஒதுங்கி விடுவது அவர் தமது கலாசார வளர்ச்சிக்கு ஆற்றிய பெரிய உதவியாகும்.

---

அதே போன்று கிறிஸ்தவ ஆலயங்கள், பௌத்த விகாரைகள், முஸ்லிம் பள்ளிவாசல்கள் போன்ற வணக்கஸ்தலங்களை கருத்திற்கொள்ளும் போது அந்த ஸ்தலங்களில் சினிமா பாடல்களோ. கவர்ச்சி நடன நாடகங்களோ இருக்கின்றனவா? இல்லவே இல்லை. பக்தி கீதங்களைத் தவிர வேறு ஒன்றுமே இல்லை. அமைதியான முறையில் ஆராதனை நடத்தப்படுகின்றது.

பௌர்ணமி தினங்களில் பௌத்த விகாரைக்கு செல்லும் பக்தர்களை கருத்திற்கொள்ளும் போது எம்மால் அவதானிக்கக் கூடியதாயுள்ளது என்ன? அனைவருமே வெள்ளை உடையுடன் பெண்கள் தமது மரபு உடைகளை கவர்ச்சி இல்லாது உடுத்துவதை எம்மால் அவதானிக்கக் கூடியதாயுள்ளது.

இதிலிருந்து உணரக் கூடியதாயுள்ளது யாது? ஒவ்வொருவரும் தமது மதத்தை நேசிக்கின்றனர்.

(தொடர்ச்சி 14ம் பக்கம்)

# சோதிடக் கலை

## உங்கள் கேள்விகளுக்கான தில்லையின் பதில்கள்

இந்து கலாசாரம் இதழில் வரும் கூப்பனை பூர்த்திசெய்து ஒருவர் இரண்டு கேள்விகளுக்கு மேற்படாமல் அனுப்பினால் 'தில்லை' உங்களுக்கு தகுந்த பதில்களை அளிப்பார்.

இந்து கலாசார சோதிடப் பகுதி

பெயர் :..........................................

பிறந்த வருடம்.........மாதம்.........திகதி.........

நேரம்......................நட்சத்திரம்................

கேள்வி:..........................................

..........................................

..........................................

..........................

கையொப்பம்

மேற்கண்ட கூப்பனை வெட்டி ஒரு போஸ்ட்கார்டில் ஒட்டி அனுப்ப வேண்டும். கூப்பன் இல்லாத கார்டுகள் கவனிக்கப்பட மாட்டாது. அனுப்பவேண்டிய முகவரி:-

சோதிடப் பகுதி
இந்து கலாசாரம்
39/23, நெல்சன் ஒழுங்கை
கொழும்பு-3.

1. துரைராஜா விமலேந்திரன், பலான்கொட

கே. பி-தி: 16-7-1974, ரோகிணி நட்சத்திரம். என் எதிர்காலம் எப்படி இருக்கும்? இவ்வருடம் நான் எடுக்கும் காரியத்தில் சித்தி கிட்டுமா?

ப. உங்கள் பிறந்த திகதிப்படியும் நட்சத்திரப் படியும் திட்டமிட்டு கருமமாற்றினால் எதிர்காலம் சுபீட்சமாக இருக்கும். 1991ம் ஆண்டு மாசி 14ன் மேல் உங்களுக்கு சிறப்பான பலனைத் தரக்கூடிய காலம். இவ்வருடம் நீங்கள் எடுக்கும் காரியம் சித்தியாக அமையும்.

2. வீரப்பன் சந்திரசேகர்

கே. பி-தி: 27-7-1970, ரேவதி நட்சேத்திரம் எதிர்காலம் சுபீட்சமாகவும்' செல்வாக்காகவும் அமையுமா? எந்தவிதமான வாழ்க்கை அமையும்?

ப. ரேவதி நட்சேத்திரத்தில் பிறந்த உங்களுக்கு 1990ம் ஆண்டு ஆனி 18ல் இருந்து மிகவும் நன்மையான காலம். மற்றவர் மதிக்கவேண்டும் என்பதற்காக வாழாமல், கொள்கையுடனும் நம்பிக்கையுடனும் கருமமாற்றினால் சிறந்த வாழ்க்கை அமையும் வெளிநாட்டு வாய்ப்புகளும் உண்டு.

3. அருணாசலம் பொன்னம்பலம், பெல்மதுளை, காவத்தை.

கே. பி-தி: 3-5-1941, புனர்பூசம் நட்சேத்திரம் என் வாழ்வில் என்றுமே வெற்றி இல்லையே, விமோசனம் உண்டா? எப்போது?

ப. நீங்கள் புனர்பூசம் நட்சேத்திரம் கர்க்கடக இராசியில் பிறந்ததாலும், விதி எண் ஐந்தாக உள்ளதால் வாழ்க்கையில் எதிர்நீச்சல் போட்டே முன்னேற்றம் அடையவேண்டும். அடிக்கடி தொழில்களை மாற்றும்தன்மை பிடிவாதக்குணம் இவைகளை கைவிட்டால் 50வயதிலிருந்து நல்ல விமோசனம் உண்டு.

4. பத்மா பொன்னம்பலம், பெல்மதுளை காவத்தை

கே. பி-தி: 9-10-1954, சதயம் நட்சேத்திரம், கடந்த 12 வருடங்களாக என் முகத்தில் உள்ள கரும் புள்ளி மாறவில்லை. 7-1/2 சனி முடிந்தும்கூட.

ப. உங்களுக்கு 7-1/2 சனி முடிந்தது என்று யார் சொன்னது? சதயம் நட்சேத்திரம் கும்பராசியான உங்களுக்கு திருக்கணித பஞ்சாங்கப்படி 1990ம் ஆண்டு பங்குனி 18ல் இருந்து ஏழரைச்சனி முன்கூறு ஆரம்பமாகியுள்ளது. வாக்கியப் பஞ்சாங்கப்படி 1991ம் ஆண்டு மாசி 14ல் ஏழரைச்சனி ஆரம்பமாகின்றது. எனவே கரும்புள்ளி இருந்தாலும் கவலைப் படவேண்டாம். 1991ம் ஆண்டு பிற்பகுதியில் மாறி விடும்.

5. எஸ். நாதன், பண்டாரவளை.

கே. பி-தி: 27-5-1955, ஆயிலியம் நட்சேத்திரம் என் வாழ்க்கை பூரண மனநிறைவைத் தருமா?

ப. நீங்கள் ஆயிலியம் நட்சேத்திரம் கர்க்கடக இராசி ஆனதால் 1991ம் ஆண்டிலிருந்து வாழ்க்கை மனநிறைவுக்கான பாதைகள் தொடரும். 1992ம் ஆண்டு உங்கள் எண்ணப்படி காரியங்கள் கைகூடும்.

6. அ. கணேசன், மட்டக்களப்பு.

கே. நட்சேத்திரம் கார்த்திகை 4ம்பாதம் எனது கஷ்டகாலம் எப்போது நீங்கும்?

ப. உங்கள் பலனுக்கு அட்டமச்சனிகாலம் முடிவுற இருப்பதால், இன்னும் மூன்று மாதங்களில் கஷ்டகாலத்தின் ஒருபகுதி நீங்கும், அதன்பின் படிப் படியாக கவலைகள் மறையும்.

7. பூபாலன், வெள்ளவத்தை,

கே. சதயம் நட்சேத்திரம், கும்பராசி, வெளிநாட்டுக் கல்வி கிடைக்குமா? எப்போது?

ப. திருக்கணித பஞ்சாங்கப்படி ஏழரைச்சனி தொடங்கியுள்ளதால் 1991ம் ஆண்டு மார்கழி 22க்குள் வெளிநாட்டுப் பயணம் கல்வி என்பன கிடைக்க வாய்ப்பு ஏற்படும். 1991ம் ஆண்டு ஆனி 18ல் மேன் சிறந்த கல்வியுண்டு.

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

# மும்மலங்களை அழித்து அருள் சொரியும்

# கந்த சஷ்டி விரதம்

எஸ். தெய்வநாயகம்

உயிர்கள் எண்ணில்லாதன. அனாதியே மலத்தினாற் பந்திக்கப்பட்டன. மல பந்தத்தினால் பிறந்திறந்துழல்வன. பிறந்திறந்துழலும் போது வினைகளைச் செய்வன நல்வினை, தீவினைகளுக்கேற்ப இவை, துன்பங்களை அனுபவிப்பன. இவ்வண்ணம் நிகழும் போது இருவினையொப்பு உண்டாகும். இருவினையொப்பாவது நல்வினையால் வரும் இன்பத்திலும் தீவினையால் வரும் துன்பத்திலும் விருப்பு வெறுப்புக்களின்றியிருத்தல். இருவினையொப்பு உண்டாக மலம் பரிபாகப்படும். அப்பொழுது கடவுளின் திருவருள் பதியும். கடவுள் குருவாக வந்து தீக்கையினாலே மலவலிமை முற்றும் நீங்கி ஞானோபதேசஞ் செய்தருளுவார். பின்பு அவ்வுயிர்கள் பிறப்புக்கள் நீங்கி கடவுளுடைய திருவடி நிழலின் கீழ் அழியாத பேரின்பத்தை அடையும் இத்தகைய் உண்மைப் பொருளை உலக உயிர்களுக்கு உணர்த்தி ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களை ஒழித்து இன்பவாழ்வு வாழ வழிவகுக்கும் விரதமே கந்த சஷ்டி விரதமாகும்.

## ஆணவம்

ஆணவம் செம்பிற் களிம்புபோல ஆன்மாவிலே அனாதியே பற்றிய மூலமலம். மிகவும் இருண்ட வடிவமுடையது. அறியாமை முதலிய தீய குணங்களை உண்டாக்கும். அவ்வறியாமை அவாவைப் பிறப்பிக்கும். அவா இருவினைகளை உண்டாக்கும். இவ்வாணவமலம் ஒன்றேயாயிருந்தும் எல்லா உலகங்களிலுமுள்ள எல்லாவுயிர்களையும் மறைக்கும் எண்ணிறந்த சக்திகளையுடையது. ஒரு காலவெல்லையிலே நீங்குந் தன்மையுடையது திருவருளாலே வலிசுருங்கி உயிரறிவை மறையாது அடங்கிக் கிடக்கும்.

## கன்மம்

உயிர்கள் பிறவியெடுத்துப் போக்குவரவு செய்யும் போது உஞற்றுகின்ற இருவினைக்கும் கன்மம் எனப்படும். இக்கன்மம் உயிர்கள் எடுக்கும் உடம்புகளுக்கும் அவை நுகரும் இன்ப துன்பங்களுக்கும் காரணமானது. பலவகைப்பட்ட இன்ப துன்பங்களாய் விரியும். இது மனம், வாக்கு, காயங்களினாற் செயற்படும். மன நினைவால் வருவன நல்ல எண்ணங்களும் தீய எண்ணங்களுமாம். சொல்லினால் வருவன நல்ல பேச்சுக்களும் தீய பேச்சுக்களுமாம். காயத்தால் வருவன நல்ல செய்கைகளும் தீய செய்கைகளுமாம். கன்மம் நான் எனும் முனைப்போடு செய்யும்பொழுது ஆகாமியம் ஆகும். அது புத்தி தத்துவம் பற்றுக்கோடாக மாயையிலே கிடக்கும்பொழுது சஞ்சிதம் எனப்படும்,

ஒரு பிராரத்த வினையை நுகரும்பொழுது நான் எனும் செருக்கினால் ஆகாமியம் உண்டாகும். பிராரத்தம் அனுபவத்தாலே நீங்கும். சஞ்சிதம் குருவருளால் நீங்கும். ஆகாமியம் எல்லாம் இறைவன் செயலென்று எண்ணியிருக்கும் உண்மை ஞானத்தால் நீங்கும்.

## மாயை

சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதிமாயை என மூவகைப்படும். உயிர்களுச்கு வேண்டிய உலகங்களும் உடம்புகளும் கரணங்களும் போகப் பொருள்களும் மாயையிலிருந்தே உண்டாகும்.

சுத்தமாயையிற் சிவதத்துவம் ஐந்தும் அசுத்த மாயையில் வித்தியாதத்துவம் ஏழும் பிரகிருதி மாயையில் ஆன்மதத்துவம் இருபத்துநான்குமாக முப்பத்தாறு தத்துவங்களும் தோன்றும். உயிர் இவைகளைப் பற்றி நின்று இன்பதுன்பங்களை நுகரும். தத்துவ சுத்தியெய்தித் திருவருளால் தன்னையறிய வருங்கால் உயிர் மாயாமலத்தினின்றும் நீங்கும்.

கந்தபுராண வரலாற்றிலே சூரன், சிங்கன், தாரகன் எனும் அசுரர் மூவரும் தேவர்களைச் சிறையிட்டமை மும்மலப் பிணியினால் உயிர்கள் உடம்பெடுத்து வருந்துதலாகவும் முருகக் கடவுள் சூரன் முதலிய அசுரர்களைக் கொன்று தேவர்களைச் சிறைமீட்டது கடவுள் பெருங்கருணையினால் அவ்வுயிர்களை மும்மலப் பிணிப்பினின்றும் நீக்கி ஆட்கொள்ளுதலாகவும், எமக்குப் புகட்டப்பட்டிருக்கின்றது.

பிரமாவுக்குத் தக்கன், காசிபன் என்ற மகன்கள் இருந்தனர். தக்கன் பல வரங்களைப் பெற்று இறுதியில் சிவபெருமானால் தோற்றுவிக்கப்பட்ட வீரபத்திரக் கடவுளால் கொல்லப்பட்டான். காசிபன் பலநாள் தவஞ்செய்து சித்திகளைப் பெற்று மேன்மையுற்று விளங்கினான். ஒருநாள் சுக்கிரனால் ஏவப்பட்ட மாயை என்னும் பெண் காசிபன் இருந்த இடத்திற்கு வந்தாள். காசிபன் அவளைக் கண்டு ஆசைகொண்டான். அவன் மனநிலை குலைந்தது. இதுவரை அவன் கடைபிடித்த உறுதியும் தளர்ந்தது. இதனால் காம மயக்கமுற்று அப்பெண்ணை சேர முயன்றான். அவர்கள் இருவரும் அவ்விரவின் முதற்சாமத்தில் சேர்ந்ததால், மனித முகத்துடன் சூரன் பிறந்தான். அச்சூரனுடன் மனித முகங்களுடன் பலபேர் தோன்றினர்.

(தொடர்ச்சி 12ம் பக்கம்)

ஆன்மீக வழிகாட்டியின் மூலம்

# எமது பிரச்சனைகளைத் தீர்த்துக்கொள்ளலாம்!

சுவாமி ஜெகதீஸ்வரானந்தா

''எமது மனதின் குழப்பங்களையும் பிரச்சனைகளையும் தீர்த்துக்கொள்ளப் பலவேளைகளில் எமக்கு வழி தெரிவதில்லை. விரக்தியும் குழப்பமும் மேலோங்குகின்றன. துயரமுறுகின்றோம். ஆன்மீக மார்க்கத்தில் இணைவதன்மூலமும், தெய்வீக வழிகாட்டியாக ஒரு குருவை ஏற்று அவர் வழி நடப்பதன் மூலமே இதற்கு விடை காணலாம்.

இவ்வாறு திருகோணமலை சிவயோக சமாஜத்தை நிறுவி அருள்புரிகின்ற ஸ்ரீமத் சுவாமி கங்காதரானந்தா அவர்களின் பிரதம சீடரான ஸ்ரீமத் சுவாமி ஜெகதீஸ்வரானந்தா குறிப்பிட்டார். கடந்த 6-10-90 பிற்பகல் பம்பலப்பிட்டி பிரான்ஸிஸ் மகாதேவா அவெனியூ, திரு. சற்குணநாதன் அவர்கள் இல்லத்தில் இடம்பெற்ற சிவயோக சமாஜ பஜனையில் சிறப்புரையாற்ற சுவாமி ஜெகதீஸ்வரானந்தா அவர்கள் கலந்துகொண்டார்.

சுவாமி அவர்கள் தொடர்ந்து பேசுகையில்,

''எமது தெய்வீக குருவாகவும், கண்கண்ட தெய்வமாகவும் விளங்குகின்ற சிவயோக சமாஜ ஸ்தாபகர் ஸ்ரீமத் சுவாமி கங்காதரானந்தா அவர்கள், தன்னைச் சரணடைந்தோரை கருணையோடு ஏற்றுக்

அன்புச்செல்வன்

காக்கின்றார். அவரை பக்தர்கள் நேரில் சந்தித்தும் கடிதங்களூடாகவும் தமது பிரச்சனைகளை முன்வைக்கின்றனர். தனது பக்தர்களின் துன்பதுயரங்களை இரண்டு விதங்களில் தீர்த்துவைக்கின்றார் சுவாமிஜி அவர்கள். ஒன்று அவர்கள் படும் வேதனையின் தாக்கத்தை தானே ஏற்றுக்கொள்வது. மற்றது உலகியல் வாழ்விலே முகங்கொடுத்து பிரச்சனைகளை சமாளித்து வாழும் மனப்பக்குவத்தை அளிப்பது. இன்று எமது சூழலில் துயரங்களே மேலோங்கியுள்ளன. பிரச்சனைகளுக்கு தீர்வு தெரியவில்லை. ஒவ்வொரு குடும்பத் தலைவரும் தமது சொந்தப் பிரச்சனைகளுக்கு முகம்கொடுக்கும்போது திணறுகிறார்கள். இது தவிர சமூகப் பிரச்சனைகளும் பாரமாக அழுத்துகின்றன. இவற்றை தெய்வீக ஒருவரின் வழிநடத்தல்மூலம் நாம் இலகுவாக்கிக் கொள்ளலாம். எமது அன்றாடக் கடமைகளையும் எமது சமூகக் கடப்பாடுகளையும் மனச்சான்றுக்கு விரோதமின்றி ஆற்றுகின்றபோது மனம் அமைதி பெறும். அந்த ஆன்மீக வாழ்வுக்காக ஒரு தெய்வீக குரு ஒருவரிடம் எமது வாழ்வை துணிந்து நாம் ஒப்புக் கொடுத்துவிடலாம். அதனால் கிடைக்கின்ற நன்மைகள் அளவிட்டுச் சொல்லமுடியாதவை. நாம் பிறந்த பயனையும் கிடைத்தற்கரிய மனிதப் பிறவியின் மேன்மையையும் உணர்ந்தவாவது நாம் மேலான வாழ்வு வாழ்ந்தாக வேண்டும்''. எனக் குறிப்பிட்டார்.

இப்பஜனையில் திரு. முருகேசு அவர்களின் ''ஸ்ரீ அரவிந்தர்'' பற்றிய சொற்பொழிவும் இடம்பெற்றது. முதுபெரும் கல்விமான் திரு. மாணிக்க இடைக்காடர், இந்துசமய முன்னாள் பணிப்பாளர் திரு. வி. என். சிவராஜா, மின்சக்தி, எரிபொருள் இராஜாங்க அமைச்சின் செயலாளர் திரு. சி. மாணிக்கவாசகர், முன்னாள் சுங்க அதிகாரி திரு. கே. கே. சுப்பிரமணியம் உட்பட பல பிரமுகர்கள் இப்பஜனையிற் கலந்துகொண்டனர். ஹெவ்லொக் டவுன் தபால் நிலைய அலுவலர் திரு. கனகசிங்கம் திருமதி கனகசிங்கம் ஆகியோர் இப் பஜனையை ஒழுங்கு செய்திருந்தனர்,

(8ம் பக்க தொடர்ச்சி)

சோதிடக்கலை . . .

8. செல்வி கார்த்திகா, கொழும்பு-4

கே. புனர்பூசம் நட்சேத்திரம், எனது வாழ்க்கையில் முன்னேற்றம் உண்டா? எப்போது?

ப. கர்க்கடகம் இராசியான உங்களுக்கு வியாழ பகவான் ஜென்மத்தில் இருந்தாலுங்கூட தீமை இல்லை. பரீட்சையில் வெற்றி 1991ம் ஆண்டு ஆடி 18ல் இருந்து 1992ம் ஆண்டு ஆனி 28க்குள் திருமணம் ஆலவதோடு தொழிலில் முன்னேற்றம் உண்டு.

9. ஆர். ரவிச்சந்திரன், மாதம்பை

கே. மூலம் நட்சேத்திரம், எனது வாழ்க்கையில் தொல்லைகளே கூடிக்கொண்டு வருகிறது. விமோசனம் உண்டா?

ப. உங்களுக்கு ஏழரைச்சனி கடைக்கூறு ஆரம்பமாகவுள்ளதால், 1991ம் ஆண்டு மாசி 10 இலிருந்து தொல்லைகள் குறையும். 29 வயதில் மேல் சிறந்த முன்னேற்றம் ஏற்படும்.

10. சந்திரன் கொள்ளுப்பிட்டி

கே. கன்னி ராசியான எனது எதிர்காலம் எப்படி

ப. கன்னி ராசிக்கு வியாழன் 11ல் வந்திருப்பது சுபஸ்தானம், தொழில் உயர்வு, குடும்பபேறு இவைகளைத் தரக்கூடியது 1991ம் ஆண்டு மாசி 18க்குள் திருமணப் பேறும் உண்டாம்.

# வெவ்வேறு யுகங்களில் மனிதப் பண்புகள்

ஒவ்வொரு யுகத்திலும் உள்ள நிலையைப்பற்றி சாத்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. மகாபாரதத்திலும் சாந்திபர்வத்தில் இது கூறப்பட்டிருக்கிறது. 'கிருதயுகத்தில்' எல்லோரும் மகிழ்ச்சியுடன் இருந்திருக்கிறார்கள். தர்மம் ஓங்கி இருந்ததுதான் அதற்குக் காரணம். மனிதன் சுமார் முப்பத்திரண்டு அடி உயரம் இருந்திருக்கிறான். அவன் உடலைப் போலவே உள்ளமும் மிக உயர்ந்ததாக விளங்கி இருக்கிறது. அவனுடைய மனத்தில் கருணையும் செயலில் பண்பும் இருந்திருக்கின்றன. மனிதன் இயற்கையுடன் ஒட்டி வாழ்ந்திருக்கிறான். அதனால் மிருகங்களையும் பறவைகளையும் கூடப் புரிந்து கொண்டிருந்திருக்கிறான். அவை மனிதனுடன் பேசியதாகச் சொல்லப்படுவதன் பொருள் இதுதான். இவற்றால் கிருதயுகம் பொன்மயமானது என்று வர்ணிக்கப்படுகிறது. இது சுமார் முப்பது லட்சம் ஆண்டுகள் இருந்திருக்கிறது.

அடுத்தது 'திரேதாயுகம்'. இந்த யுகத்தில் மனிதனின் உயர்பண்புகள் குறைந்திருக்கின்றன. பலமும், பராக்கிரமமும் ஓங்கி இருந்திருக்கின்றன. கிருதயுகத்தில் இருந்த சத்வகுணம் போய், உடல்வலிமையை உயர்த்தும் ரஜோகுணம் மேம்பட்டிருக்கிறது. மனிதன் சுமார் 21 அடி உயரம் வளர்ந்திருக்கிறான். தர்மம் இந்த யுகத்தில் மூன்று கால்களில் நின்றிருந்ததாகக் கூறப்படுகிறது. இது வெள்ளியுகம். இது சுமார் பத்து லட்சம் ஆண்டுகள் இருந்திருக்கிறது.

தொடர்ந்து வருவது 'துவாபர யுகம்'. இதில் தர்மத்தின் மதிப்பு மேலும் இறங்கிவிட்டது. இதில் மனிதன் மனிதனுடன் போட்டி போடுவதும், வெல்வதும் வீழ்த்துவதும் சாதாரணமாகிவிட்டது. மனிதனின் உயரம் பத்தரை அடியாகக் குறுகிவிட்டது. அதைப் போலவே அவனுடைய உள்ளவலிமையும் குறைந்துவிட்டது. தீயபண்புகள் தலைகாட்டத் தொடங்கிவிட்டன. தர்மம் இரண்டுகாலில் நின்றது. இதன் காலம் சுமார் ஏழு லட்சம் ஆண்டுகள், இது செப்பு யுகம்.

கடைசியாக வருவது 'கலியுகம்'. இதுவே இரும்பு யுகம். இதில் தர்மம் ஒற்றைக் காலில் நின்று தவிக்கிறது. தாமசகுணம் மலிந்துவிட்டது. தீய சக்திகள் ஓங்கிவிட்டன. மனிதனின் உயரம் ஏழு அடியாகவும் அதற்குக் கீழேயும் குறுகிவிட்டது. கெட்ட வழிகளில் முன்னேறும் ஆசை எல்லோரையும் கவர்ந்து

(தொடர்ச்சி 14ம் பக்கம்)

# சோம்பலைப் போல் இழிவில்லை

ஊருக்கு நல்லது சொல்வேன்—எனக்
குண்மை தெரிந்தது சொல்வேன்;
சீருக் கெல்லாம் முதலாகும் — ஒரு
தெய்வம் துணைசெய்ய வேண்டும்.

வேத மறிந்தவன் பார்ப்பான், பல
வித்தை தெரிந்தவன் பார்ப்பான்,
நீதி நிலைதவ றாமல் — தண்ட
நேமங்கள் செய்பவன் நாய்க்கன்.

பண்டங்கள் விற்பவன் செட்டி — பிறர்
பட்டினி தீர்ப்பவன் செட்டி
தொண்டரென் றோர்வகுப் பில்லை — தொழில்
சோம்பலைப் போல்இழி வில்லை.

நாலு வகுப்பும்இங் கொன்றே — இந்த
நான்கினில் ஒன்று குறைந்தால்
வேலை தவறிச் சிதைந்தே — செத்து
வீழ்ந்திடும் மானிடச் சாதி.

ஒற்றைக் குடும்பந் தனிலே — பொருள்
ஓங்க வளர்ப்பவன் தந்தை;
மற்றைக் கருமங்கள் செய்தே — மனை
வாழ்ந்திடச் செய்பவள் அன்னை;

ஏவல்கள் செய்பவர் மக்கள்! — இவர்
யாவரும் ஓர்குலம் அன்றோ?
மேவி அனைவரும் ஒன்றாய் — நல்ல
வீடு நடத்துதல் கண்டோம்;

சாதிப் பிரிவுகள் சொல்லி — அதில்
தாழ்வென்றும் மேலென்றும் கொள்வார்,
நீதிப் பிரிவுகள் செய்வார் — அங்கு
நித்தமும் சண்டைகள் செய்வார்.

சாதிக் கொடுமைகள் வேண்டாம் — அன்பு
தன்னில் செழித்திடும் வையம்;
ஆதர வுற்றிங்கு வாழ்வோம்; — தொழில்
ஆயிரம் மாண்புறச் செய்வோம்.

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் — புவி
பேணி வளர்த்திடும் ஈசன்;
மண்ணுக் குள்ளே சிலமூடர் — நல்ல
மாத ரறிவைக் கெடுத்தார்.

கண்கள் இரண்டினில் ஒன்றைக் குத்திக்
காட்சி கெடுத்திட லாமோ?
பெண்க ளறிவை வளர்த்தால் — வையப்
பேதைமை யற்றிடுங் காணீர்.

(9ம் பக்க தொடர்ச்சி)

## மும்மலங்களை அழித்து . . .

அவ்விரவின் இரண்டாம் சாமத்தில் இருவரும் சிங்க வடிவமெடுத்து கலந்தார்கள். அதனால் சிங்கன் பிறந்தான். அவனைப்போல பலபேர் தோன்றினார்கள். மூன்றாம் சாமத்தில் யானை வடிவமெடுத்து புணர்ந்ததால் யானைமுகத்துடன் தாரகன் பிறந்தான். அவன் சாயலில் பலபேர் உருவாகினர். நான்காம் சாமத்தில் ஆட்டு வடிவமெடுத்து கலந்தபோது ஆட்டு முகத்துடன் அசமுகி பிறந்தாள். இவளைப்போல் ஆயிரக்கணக்கானவர்கள் தோன்றினார்கள்.

சூரனிடத்தில் கடவுள் இல்லை, நானே கடவுள் என்ற எண்ணமும், அதனாற் பிறக்கும் அகங்காரமும், பல அண்டங்களிலுஞ் செறிந்து பல உயிர்களையும் தன வலிமைக்குள்ளாக்கும் ஆணையும், அறியாமையும், கொலை, காமம், வஞ்சனை முதலிய தீய குணங்களும் அமைந்திருந்தன. அவை ஆணவ மலக் குணங்களாதலின் சூரன் ஆணவ மலத்துக்கு ஒப்பாவதையும் ஆசை இறுகப்பற்ற அதனால் விழுங்கப்பட்ட உயிர் மிருகத்தன்மையை அடையும். அப்பொழுது கொலைத் தொழிலுக்குக் காரணமாகிய வெகுளியும், அதற்குத் துணையாகிய பல பொல்லாக் குணங்களும் பிறக்கும். இவை கன்ம மலம் பற்றுக் கோடாகக் நிகழும்.

சிங்கன் வெட்ட வெட்ட முளைக்கும் இயல்புடைய பல தலைகளும் கரங்களுமுடையவன். விரைவாகக் கொலைத் தொழில் புரிவதும் கோபக் குணமுடையதுமாகிய சிங்க வடிவமுடையவன். ஒரே வொரு கால் நற்புத்தியுடையவன். குலிசாயுதத்தினாலே கொல்லப்பட்டவன். பிறவிதோறும் ஈட்டப்பட்டுப் பலவாக விரிவதும் ஒரு கன்ம முடிவிலே வேறொரு கன்மத்தைத் தோற்றுவிப்பதும், அனுபவ முடிவிலே நல்லறிவைப் பிறப்பிப்பதும், குருவருளாலும் ஞானத்தாலும் அழிவதும் ஆகிய கன்மமலத்தியல்பு சிங்கனிடத்து அமைந்திருந்ததால் அவன் கன்ம மலத்திற்கு ஒப்பானவன்.

ஆணவ மலமும், கன்ம மலமும் தம்குணங்களை உயிரறிவில் மேலும் செறிந்து இறுகப் பிணித்ததனாலே அவ்வுயிர் இன்னும் கீழ் நிலையடையும். அப்பொழுது மயக்கமாகிய குணமும், அதற்குத் துணையாகிய பல பொல்லாக்குக் குணங்களும் தோன்றும். இவை மாயாமலம் பற்றுக் கோடாக நிகழும். தாரகன் பகையைத் தன்னிடத்தே வைத்துச் சாதிப்பதும், மதமயக்கம் உடையதும், மாயையின் வடிவமாக கொள்ளப்படுவதுமாகிய யானை முகமும் மாயா வலிமையும் மயக்கங்களைச் செய்யுங் கிரவுஞ்ச மலையின் துணையும் உடையவனாய் மாயாபுரியை இடமாகக் கொண்டமையால் அவன் மாயா மலம் எனக் கொள்ளப்படுவான் "மாயை மயக்கமுஞ் செய்யுமன்றே" என சித்தியார் கூறுவதுபோல மும்மலங்களும் கலந்து மேலும் செறியப் பிணித்ததினாலே கலக்கமடைந்த உயிர் மேலும் கீழ்நிலையடையும். அப்பொழுது பல தீய குணங்கள் தோன்றும். அஜமுகியிடத்தில் ஒன்றிலும் நிலையில்லாததாய்ப் பலவற்றிலும் பற்றி முறை தப்பி ஆசை கொள்ளும் ஆட்டின் தன்மை அமைந்திருந்ததால் அவள் மலக் கலப்பாற் பிறந்த தீய எண்ணங்களாகக் கொள்ளப்படுகின்றாள்.

காசிபனிடத்திலே தோன்றிய காம ஆசையாகிய தீய எண்ணம் சூரன் முதலியோராக உருப்பட்டு ஆயிரத்தெட்டண்டங்களில் பரந்து நன்மையை வருத்திச் சிறைப்படுத்தி நூற்றெட்டு யுககாலம் நின்றதுடன் காசிபனுக்கு மானக்கேடும், தலக்கேடும் உண்டாகி அழியாப்பழியை ஏற்படுத்தின.

சூரன், திக்கு விசயஞ் செய்து திக்குப்பாலகரை வென்றான். திருமாலையும், பிரமனையும், போரிற் புறங்கண்டு அவர்களைத் தமக்கு ஏவல் புரியும்படி பணித்தான். இந்திரனையும் மனைவியையும் துரத்திச் சயந்தனையும் ஏனைய தேவரையும் சிறைப்படுத்தினான். தேவர்கள் மீன் சுமத்தல் முதலிய இழி தொழில்களைச் செய்தார்கள். தண்டனைகளால் வருந்தித் தாங்க முடியாத துன்பங்களை அடைந்தார்கள். தேவர்கள் பலவித தண்டனைகளைப் பெற்று மிக வருந்திச் சிவபெருமானே தனக்குத் துணையென்று கடைப்பிடித்து அவரை நினைந்து அழுதுபுலம்பினர். நீண்டகாலமாக தீவினைப்பயனை அனுபவித்த உயிர்வலி குறைந்து சோரும். அப்பொழுது நல்லறிவு சிறிது உண்டாகும். உண்டாக உயிர்க்கு உயிராய் நின்று துணை செய்பவர் கடவுளே என்று துணிந்து அவரை இறுகப் பற்றும். கடவுளை இறுகப்பற்றி வழிபடக் கடவுள் உயிருக்கு அருள்புரியத் திருவுளங்கொள்வார். இதன்படி சிவபெருமான் தேவர்களைக் காக்க அருள் புரியுந் திருவுளத்துடன் தமக்கு இயல்பான அறு திருமுகங்களையுங்கொண்டு எழுந்தருளியிருந்து அம்முகங்களிலுள்ள ஆறு நெற்றிக்கண்டோறும் ஒவ்வொரு பொறியாக ஆறு திருப்பொறிகளை அருளினார். அவை சரவணப்பொய்கையை அடைந்து ஆறு திருமுகமும் பனிரெண்டு திருக்கரங்களையுடைய குழந்தை வடிவாய் திகழ்ந்தது. அக்குழந்தையை வளர்க்க கார்த்திகைப் பெண்களை சிவன் நியமித்து தக்க வயது வந்தவுடன் சூரனை சங்காரம் செய்ய அனுப்பினார்.

முருகக் கடவுளுக்கு முற்றறிவு, வரம்பிலின்பம், இயற்கையறிவு, தன்வயமுடைமை, குறைவிலாற்றல், வரம்பிலாற்றல் என்னும் ஆறு குணங்களும், ஆறு திருமுகங்களாகவும் மற்றை அருட்குணங்கள் உறுப்புக்களாகவும் அமைந்துள்ளன. முருகக் கடவுளுடைய திருமேனியும், பெண்களும், ஆயுதமும், மயிலும் சேவலும் எல்லா உயிர்களுக்கும் அருள்புரியுமாறு கொண்ட அருட்குணங்களின் வடிவங்களேயன்றி பிறவல்ல. தேவர்களைக் காக்க சிவபெருமானின்

(தொடர்ச்சி 13ம் பக்கம்)

(12ம் பக்க தொடர்ச்சி)

**மும்மலங்களை . . .**

ஆணை கிடைத்தவுடன் முருகப்பெருமானும் வீரவாகு முதலிய துணைவர்களும், பூதகணங்களும், இருமாலாதி தேவர்களும், சூரன் முதலியோரைக் கொல்வதற்கு படையெடுத்துச் சென்றார்கள். உயிரை மூடிய ஆணவமாதி மும்மலங்களின் வலியைத் தொலைக்க இறைவன் மெய்யுணர்ச்சி முதலிய அருட்குணங்களுடன் வெளிப்படுவார். மலக்குணங்களை அடக்க அருட்குணங்கள் செய்யும் தொழில்களே போர் எனப்படும்.

எனவே முருகக் கடவுள் சேனைகளுடன் செல்லும் போது வழியில் தாரகனுடைய இருப்பிடம் முதலில் வந்து, தாரகனை முதலில் கொல்ல வேண்டும் என திருவுளங்கொண்டு தாரகனுடன் சமர் செய்து அவனையும், அவனது இருப்பிடமாகிய கிரவுஞ்ச மலையையும் அழித்தொழித்தார். தாரகன் மாயாமலத்திற்கு ஒப்பானவன். உலகமும், உடலும், கரணங்களும் போகப்பொருள்களும் தோன்றுவதற்கு முதற்காரணம் மாயையாம். மாயையிலிருந்து உயிர் கன்மப் பலனை நுகர்வதற்கு துணையாகிய மூப்பத்தாறு தத்துவங்களும் பிறக்கும். உயிர் இத்தத்துவங்களேதான் என்று மயங்கி நிற்கும் நிலையை விட்டுத் திருவருள் துணையினால் தான் அவற்றிற்கு வேறெனத் தெரிந்து நீங்கி நிற்கும்பொழுது மாயாமலவலி நீங்கும். இது மாயாமல நீக்கமாகும். தாரகன் அழிந்தது இத்தன்மையானது.

தாரகனை சங்காரம் செய்த முருகக்கடவுள் திருச்செந்தூரையடைந்து அங்கே பாடி வீடு அமைத்து சூரனுடைய எண்ணத்தை அறிவதற்காக வீரவாகு தேவரை அவனிடம் தூதாக ஏவினார். சூரன் முருகக் கடவுளை பலவாறு இகழ்ந்து சமர் செய்வதே முடிவான செயல் எனக் கூறினான். ஆணவமலப் பிணிப்பிலே அழுந்தி அறியாமைமயமாகவிருக்கின்ற உயிருக்கு மெய்யுணர்ச்சியால் வரும் நல்லுரைகள் பயன்படா. அது மாதிரியே சூரனும் ஆகும். வீரவாகுதேவர் மீண்டுவந்து சூரனுடைய எண்ணத்தை முருகக்கடவுளுக்குத் தெரிவித்தார். போர் தொடங்கியது. சூரனுடைய புதல்வர்களாகிய பானுகோபனும், அக்கினிமுகன் முதலியோரும் சூரன் மந்திரியாகிய தருமகோபனும் வீரவாகுதேவரினாற் கொல்லப்பட்டார்கள். முருகக்கடவுள் அதன்பின் சிங்கனைக் கொன்றார். முருகக்கடவுள் அவனுடைய சிரங்களை அறுக்க அறுக்க அவை முளைத்துக்கொண்டேயிருந்தது. முருகக்கடவுள் உங்காரஞ் செய்து உரப்பினார். ஒரு தலையும் இரு கரங்களும் நிற்க ஏனையவை அடங்கின. பின்பு அவைகளையும் குலிசாயுதத்தினால் அறுத்து சிங்கனைக் கொன்றார்.

சிங்கன் கன்மமலத்திற்கு ஒப்பானவன். உயிர்களால் ஈட்டப்படும் கன்மங்கள், ஆகாமியம், சஞ்சிதம், பிரார்த்தம் என மூவகைப்படும். பிரார்த்தம் எடுத்த பிறவியிலேயே அனுபவிக்கப்படுவது. பிரார்த்தத்தை அனுபவிக்கும்பொழுது ஆகாமியம் உண்டாகும். அனுபவியாத வினை சஞ்சிதம் எனப்படும். பிரார்த்தம் அனுபவத்தாலேயே நீங்கும். சஞ்சிதம் குருவருளாலே நீங்கும். ஆகாமியம் ஞானத்தினாலே நீங்கும். பிறவிக்கு காரணமான மூன்றும் நீங்குகையினாலேயே உயிர் அப்பாற் பிறவியையெடாது திருவருட் பேற்றை அடைதற்கேற்ற பக்குவ நிலையை அடையும். இது கன்மமல நீக்கமாகும்.

பிராரத்தம்அனுபவிக்கும்பொழுது ஆகாமியவினை வரும். அது தலைகளை அறுக்க அறுக்க சிங்கனுக்கு முளைத்தனவென்பது உணர்த்துகின்றது. முருகனின் திருவருளாகிய ஊங்காரத்தினால் சஞ்சித வினை வலிகெட்டது. எஞ்சி நின்ற பிராரத்தம் அனுபவத்தாலழிந்தது.

சிங்கன் இறந்த பின்பு சூரன் தனது சேனைகளுடன் சென்று முருகக்கடவுளோடு போர் புரிந்தான். வீரவாகு தேவர் முதலிய கணநாதர்களையும் பூதசேனைகளையும் இந்திரமாஞாலத் தேரினால் அகப்படுத்தி கடல் நடுவே சிறை வைத்தனர். பலவகையான மாயப்போர்களை செய்தான். அவைகளை முருகக்கடவுள் தனது சிரிப்பினால் எரித்தார். மாயையின் உதவியால் அவைகள் உயிர்பெற்றெழுந்தன. மீண்டும் முருகக்கடவுள் அவைகளை அழித்தார். பின்பு சூரனுக்குத் தமது உண்மை வடிவத்தைக் காட்டினார். அப்பொழுது சூரனுக்கு உண்மைநிலை புலப்பட்டது. பின்பு மெய்யுணர்ச்சிமறைய சூரன் போர் புரிய வந்தான். முருகக்கடவுள் அவனை வேலாயுதத்தினால் பிளந்து கொன்றார். பிளவுபட்ட இரண்டு கூறும் சேவலும் மயிலுமாக வர அவைகளை வாகனமும், கொடியுமாகக் கொண்டார் முருகக்கடவுள்.

ஆணவமலத்திற்கு எண்ணில்லாத சக்திகளுண்டு. சூரன் ஆணவமலமாதலால் அவையெல்லாம் ஒன்று சேர்ந்து திருவருட் குணங்களோடு எதிர்த்தன. அருட்குணங்களால் உண்டாகும் மெய்யுணர்ச்சி முதலியவற்றை மறைத்தன. திருவருளால் அம்மறைப்பு நீங்கிற்று. அருட்குணங்களால் மலக்குணங்கள் அழிந்தன. திருவருளின் உண்மை வடிவுக்கு முன்பே மலவலி குன்றி மடங்கியது. மடங்கிய மலவலி மீண்டும் உண்டானபோது வேலாயுதமாகிய ஞானசக்தியினால் முற்றாய் அழிக்கப்பட்டது. இது ஆணவமல நீக்கமாகும்.

இத்தகைய உண்மைப்பொருள் உலக உயிர்களிடத்தில் செறிந்து மக்கள் தம் ஆன்மாவின் விடுதலைக்கு தம்மை அர்ப்பணிக்கும் அரிய விரதமே கந்தசஷ்டி விரதமாகும். சூரனை முருகப்பெருமான் சங்காரம் செய்து அவனை ஆட்கொண்டதுபோல் ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களை சங்காரம் செய்து உண்மைப்பொருளை விளங்கிக்கொள்ளும் புனித விரதமாக இது கடைப்பிடிக்கப்படுகின்றது. முருகனுக்குரிய விரதங்களிலே ஏன் இந்துக்கள் கடைப்பிடிக்கும் விரதங்களில் மிகவும் வலிமைகொண்டது எனப் பலராலும் கருதப்படும் இக்கந்தசஷ்டி விரத நாளில் முழு உபவாசம் இருந்து முருகனைப் பூசிப்பது மிகவும் சிறந்ததாகும். அப்படிச் செய்ய முடியாதவர்கள், ஒருவேளை மட்டும் பால் பழம் உண்டு விரதம் இருப்பது நன்று. அதுவும் இயலாதவர்கள்

(தொடர்ச்சி 14ம் பக்கம்)

# சைவசிகாமணி முத்துக்குமாரசாமிப்பிள்ளை



அரிது அரிது மானிடராய் பிறப்பது. அதிலும் அரிது சைவ சமயத்தில் பிறப்பது பூர்வஜன்ம புண்ணியத்தால் தான் பிறந்த பிறவிக்கும், சைவ சமயத்திற்கும் அரும் பணியாற்றி, தான் தினம் பூஜித்து வந்த ஜிந்துபிட்டி முருகனுக்கு அடிமையாகி அந்த புண்ணிய ஸ்தலத்திலே ஆடிவேல் ஆடிப்பூரம், மார்கழிமாத பஜனை, திருவாதிரை, வருஷா அபிஷேகம் கூட்டுப் பிரார்த்தனை, இன்னும் எத்தனையோ கூறிக்கொண்டுபோகலாம். இவை அனைத்திலும் மனமாற, உளமாற இறைவன் பணியில் ஈடுபட்டு தொண்டு புரிந்தவர் பெரியவர் ''சைவசிகாமணி முத்துக்குமாரசாமி பிள்ளை அவர்கள்.''

எல்லோராலும் ''முத்துப் பிள்ளை'' என்று அன்புடன் அழைக்கப்பட்டவர் கடந்த புரட்டாதி மாதம் (29-9-90) சிவபதம் எய்திய செய்தி கேட்டு மிகவும் வேதனை அடைந்தேன்.

ஆண்டவன் இந்தப் பெரியவர் இடையறாது, ஓய்வு இன்றி அவன் தாழ் வணங்கி, அவன் பணி புரிந்து வந்த பலனாக அவருக்கு-

ஓய்வு நாள்
உணர்வு அழியும் நாள்
உயிர் போகும் நாள்

அருளி அவரை தன்பதம் அழைத்துக் கொண்டுள்ளார்.

இறைவன் ஆணையில் அவர் பதம் நாடிச் சென்றுள்ள புண்ணிய ஆத்மா சாந்தி அடைய நாம் அனைவரும் பிரார்த்திப் போமாக.

— ஆர். வைத்தமாநிதி —

(11ம் பக்க தொடர்ச்சி)

வெவ்வேறு . . .

இழுக்கிறது. ஒற்றுமை குலைந்து வருகிறது, இதன் கால அளவு சுமார் மூன்றரை லட்சம் ஆண்டுகள்.

ஆனால் இந்தக் கலியுகத்திலும் எவன் நெறிதவறாமல் வாழ முயலுகிறானோ, நல்ல பண்புகளுக்கு மதிப்புத்தந்து கடைப்பிடிக்கிறானோ, அவனுக்கு மிக நல்ல கதி கிடைக்கும் என்று சாஸ்திரம் கூறுகிறது. ஆகையால் எளிதில் கெட்ட வழிகளின மூலம் கிடைக்கக்கூடிய உயர்வை மதிக்காமல், சிரமப்பட்டாவது நல்ல வழிகளின் மூலம் உயர்வை நாடக்கூடிய மனப்பான்மையை நாம் வளர்த்துக்கொள்வதே நல்லது.

(13ம் பக்க தொடர்ச்சி)

மும்மலங்களை . . .

ஒருவேளை மதியம் உணவு உண்டு கடைசி நாளில் உபவாசம் இருப்பது சாலச் சிறந்தது. அக்காலங்களில் புனிதமாக ஆலயங்களும் வீடுகளும் அமைந்து முருகன்புகழ் பாடினாலே முற்பிறப்பில் செய்த தீவினையகலும் எனக் கூறுவர்.

(7ம் பக்க தொடர்ச்சி)

கலாசாரமும் . . .

தமது பாரம்பரிய மரபை ஒவ்வொருவரும் தாமே பேணிவருகின்றார்கள் என்ற முடிவுக்கு வரலாம்.

இவர்களோடு எம் மதத்தவர்களை ஒப்பிட்டு பாருங்கள்!

இந்து மதத்தில் பக்தி பாடல்கள் இல்லையா? தேவார திருவாசகங்கள் இல்லையா? இந்து மதத்திற்கென்று ஒரு பாரம்பரிய மரபு இருந்து வந்ததில்லையா?

இவற்றிற்கு விடைகான எத்தனியுங்கள். அப்போது நாம் எந்தளவிற்கு கவர்ச்சியில் இரண்டறக் கலந்து விட்டோம் என்பதை நாமே உணர முடிகின்றது.

ஒருவனுக்கு அறிவைக் கற்பிப்பவன் பரமாத்மாகவும், தன் சிருஷ்டிக்குக் காரணமாக தந்தை பிரம்மாவாகவும், தன்னை 10 மாதம் சுமந்து கஷ்டப்பட்ட தாய் பூமி தேவியாக, உடன் சகோதரன் ஆத்மாவின் உருவகமாகவும் எண்ணிப் போற்றத் தக்கவர்கள், இவர்கள் எது சொன்னாலும் எதிர்த்துப் பேசாது கேட்டு அதன்படி நடக்க வேண்டும்.

# அன்பளிப்பு

"பால்நினைந் தூட்டும் தாயினுஞ் சாலப்
  பரிந்து நீராவியே னுடைய
ஊனினை யுருக்கி உள்ளொளி பெருக்கி
  உவப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
  செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
  எங்கெழுந்தருளுவதினியே"

அத்தியாவசியமான, இன்றைய காலகட்டத்திற்கு ஏற்றத் தகுந்ததுமான முக்கிய கட்டுரைகளை வெளியிடும் இந்துசமய திங்கள் இதழான இந்து கலாசாரம் இதழுக்கு என் இதயபூர்வமான வாழ்த்துக்கள்.

- அன்பன்

கொழும்பு தமிழ்ச் சங்கம்

*With Best Compliments*

*of*

# A WELL WISHER

# அறத்துக்கும் . . .

(6ம் பக்க தொடர்ச்சி)

பட்டு, பட்ட இடங்களை புண்ணாக்கிவிட்டன. 'ஓஹோ'வென்று வெகுண்டெழுந்த விராதன், ஒரு மராமரத்தை வேருடன் பிடுங்கிக்கொண்டு இராமனைத் தாக்கவந்தான். இராமன் நான்கு அம்புகளால் அந்த மராமரத்தைத் தகர்த்தெறிந்து, விராதன்மீது சரமாரியாகக் கணைகளைத் தொடுத்தான்.

தன் உடலெங்கும் தைத்துக்கொண்ட அம்புகளால் ஒரு பெரிய முள்ளம்பன்றிபோல் காட்சிதந்த விராதன், அம்புகளை உதறிவிடவேண்டி, தன் உடம்பை சிலிர்த்துக் குலுக்கினான். அம்புகள் கீழே விழுந்ததும், அவனது உடலிலிருந்து குருதி கசியவே சிறிது சோர்வுற்றான் விராதன்.

அது கண்ட இராமனும்-இலட்சுமணனும், 'இவன் வரபலம் மிக்கவன். படைக்கலங்களை ஏவுவதால் இவன் சாக மாட்டான். இவனை எதிர்த்தால் நம்முடன் சளைக்காமல் போரிடுவான். எனவே இவனது கரங்களை வெட்டி வீழ்த்த வேண்டும்' என்று எண்ணி அவன் தோள்களில் ஏறிக் கொண்டனர்.

இராம-இலட்சுமணரின் ஸ்பரிசத்தால் உணர்ச்சி வசப்பட்ட விராதன், முன்னிலும் பன்மடங்கு வேகத்துடன் விண்ணில் பறந்து செல்ல ஆரம்பித்தான்.

தனித்து விடப்பட்ட சீதாபிராட்டி, தன்னைக் காக்கும் துணையின்மையை உணர்ந்து தவித்தவளாக விராதனைத் தொடர்ந்து சென்று, ''அறவொழுக்கம் நிறைந்த இவர்கள் இருவரையும் விட்டுவிட்டு, என்னையே தின்க நீ'' என்று கெஞ்சி மன்றாடினாள்.

அதைக்கண்ட இருவரும் இனியும் பொறுப்பதற்கில்லை என்ற முடிவுக்கு வந்தவர்களாக விராதனை அழுத்தி கீழே தள்ளி, தங்கள் கரங்களினாலேயே அவனுடைய தோள்களை வெட்டி வீழ்த்தினார்கள். குருதி வெள்ளமாகப் பெருக்கெடுத்தும், உயிர்ப் போகாமல் விராதன் தத்தளித்து கண்ட இராமன், ''இவனை இந்த நிலத்தில் புதைத்தலே சா'' என்று சொன்னான். இலட்சுமணன் விராதனைப் புதைப்பதற்காகக் குழிதோண்ட, விராதனைக் குழியில் தள்ள, இராமன் தன் தாள்களினால் அவனை ஸ்பரிசிக்க, இராமனின் தாள்கள் தன்மீது பட்டவுடனே விராதன் தன் அரக்க உருவம் நீங்கப் பெற்று முன்பிருந்த கந்தர்வ உருவம் திரும்பப் பெற்றான்!

''அகந்தையும், ஆணவமும் கொண்டு அலட்சியமாக இருந்த காரணத்தால் நான் குபேரனால்' அரக்கனாக மாற சாபம் கொடுக்கப்பட்டேன். இன்று தங்கள் திருவடி ஸ்பரிசத்தால் சாபம் நீங்கப் பெற்று விமோசனம் அடைந்தேன்! தன்யனானேன்!'' என்று கூறி இராம பிரானைப் போற்றிப் பணிந்து வணங்கி, விண்ணுலகு சென்றான் விராதன்.

இராமாயண காவியத்தில் அறத்துக்கும்-மறத்துக்கும் இடையே நடந்த பெரும்போரின் தொடக்கமே இராமனுக்கும் - விராதனுக்கும் இடையில் நடந்த போர் என்பதுடன், முடிவில் 'அறமே வெல்லும்' என்பதும் உறுதியாயிற்று.

## இந்துமதம் . . .

(5ம் பக்க தொடர்ச்சி)

ரங்கள் இந்த உயரிய அன்பின் தத்துவத்தைப் பல வழிகளிலும் விளக்குகின்றன.

விவாகத்தின் சிகரமான 'ஸமயாவ' என்ற நான்கு எழுத்துக்களைக் கொண்ட மந்திரம் தனிப்பெருமை வாய்ந்தது. 'இதுவரை பல வழிகளிலும் பிரிந்திருந்த நாம் இப்போது ஒன்றாக ஆகிவிட்டோம்...' என்று கூறும் மந்திரம், சிறப்பான உயர்வு-தாழ்வில்லாத உணர்ச்சியை உண்டுபண்ணிவிடுகின்றது. அன்பு மூலம் இந்த இணைப்பு எப்படி வலுப்பெறுகிறது என்ற உண்மையை எஞ்சியுள்ள மந்திரபாகம் விளக்குகிறது. இந்த அன்பு தெய்வீகமானது என்பதாலேயே தமிழில் சமய நூல்கள் இறைவனிடம் காட்டும் பேரன்பைக் காதல் என்றே குறிப்பிடுகின்றன. 'என்னுடைய இதயத்தில் உன்னுடைய அன்பு இருக்கட்டும். உன்னுடைய மனம் என்னை அடையட்டும்' என்பது போன்ற மந்திரங்கள் இந்த அன்பை இணைத்துச் சேர்த்து சமமாகப் பகிர்ந்துகொள்ள உதவுகின்றன.

இவ்வாறு இல்வாழ்க்கையை வகுத்த வேதம், பெண்கள்மீது மகத்தான பொறுப்பைச் சுமத்துகிறது. கணவனுடைய பொறுப்புகளில் ஏற்படும் சிரமங்களினால் ஏற்படும் ஆயாசத்தைப் போக்க, மனைவி தனது இன்சொல்லையும் இனிய உறவையும் தந்து அவனை ஆசுவாசப்படுத்துகிறாள். கணவனை உற்சாகப்படுத்துவதுடன் நில்லாமல் அவனுக்கு ஆலோசனை கூறவும் தகுதி உள்ளவளாக விளங்குகிறாள். இதையே வேதம் கூறுகிறது. ஓரிடத்தில் மனைவி என்ற பெண், கணவன் என்ற ஆணைவிட அதிக புத்திசாலித்தனம் கொண்டவள் என்றும் வேதம் கூறுகிறது. 'புரந்தி' என்ற அழகான சொல் அறிவு நிறைந்த மனைவியைக் குறிப்பிடுகிறது.

மனைவி இருக்கும் இடம்தான் வீடு. கணவன் அமைதியாக இளைப்பாறும் இடம் வீடுதான். கணவன்-மனைவி இருவருமே இடம்பெறும் இடமே குடும்பம் என்ற உயர்ந்த நிலைக்குக் கொண்டு போய்ச் சேர்க்கிறது. இதை இன்று மேல்நாடுகளில் புனிதமான ஒரு வசனமாகக் கூறுகிறார்கள். ஆனால்

(தொடர்ச்சி 18ம் பக்கம்)

# எழுக நீ இந்து இளைஞனே!

எழுக நீ
இந்து இளைஞனே — இந்த
உலகிற்கே — உண்மை
ஒளி பரப்புக!

ஆன்மநேய செய்தியைச் சொல்லும்
உரிமை உடைய ஒருவன் நீயே!

ஆலமரத்தின் ஆணிவேராய்
ஆழ்ந்து அகன்று ஓங்கி வளர்ந்த
வேதச்சாற்றை நீ பிழிதல் வேண்டும்—
தீதுகள் அதனால் ஒழிதலும் வேண்டும்!

பிரம்மம் என்ற ஒன்றிலிருந்து
பிறந்தது இந்தப் பெரும்பிரபஞ்சம்
ஒன்றிலிருந்தே ஒன்றுருவானது
ஒன்றிலிருந்து கோடி பிறந்தது!

உயிரும் உலகும் அதுவே என்றால்
பயிரும் பலவும் அதுவே என்றால்
பிரிவும் பகையும் பேதமைதானே
பேதமை வளர்த்தலும் பெருமைதானோ?

அழிவின் விளிம்பில் உழல்கிற மானுடம்
ஆய்ந்து ஓய்ந்து ஒன்றையே நாடிடும்
உண்மை ஒன்றே எவ்வழி தேடினும்
என்பதை உணர்ந்து நீ உணர்த்தலும் வேண்டும்

அன்பெனும் சங்கிலி இதயம் பிணைக்கும்
அன்பினாலே உலகம் நிலைக்கும்
இன்பம் என்பது 'உனக்குள்' உள்ளது
உனக்குள் இருப்பதை அனைவர்க்கு மாக்கு!

எழுக நீ,
இருள்மனங்களால் தவிக்கும் உலகிற்கு
ஆத்மஜோதியை ஒளிர்த்தல் உன்கடன்,
உன்னை நோக்கியே அசையுமிப் பூமியை
ஆதிப்பெருமையால் அரவணைத்திடுக.

**பண்டாரவளை அன்புச்செல்வன்**

(17ம் பக்க தொடர்ச்சி)

**இந்துமதம் . . .**

வேதம் அன்றே இந்த உயர்ந்த தத்துவத்தை எடுத்துக் கூறி இருக்கிறது.

தாம்பத்திய வாழ்க்கைக்கு முக்கிய அடிப்படையான ஆண்-பெண் உறவை ஒரு சாஸ்திர நூலாகவே அமைத்துக் கொடுத்திருப்பது இந்துமதம்தான். ஒரு பெண் இல்வாழ்க்கையில் கணவனிடம் எப்படிப் பழக வேண்டும் என்பதைத் தசரதன் குறிப்பிடுவதாக, இராமாயணத்தில் குறிப்பு வருகிறது. கௌசல்யா தன்னிடம் பணிவிடை செய்பவள் போலவும், தோழியைப் போலவும், சம உரிமை கொண்ட பாரியையாகவும், அன்னையைப் போலவும் பழகியவள்தான்' என்று தசரதன் எடுத்துக் கூறுகிறான். இது இல்வாழ்க்கைப் பண்பாட்டின் விளக்கம் என்றே கூறலாம். வாழ்நாளில் இன்பத்தை அநுபவிக்கவே மனிதன் பிறக்கிறான். அந்த இன்பத்தை இல்வாழ்க்கை சோபிக்கச் செய்கிறது. பலவழிகளில் உலக ஆசைகளைத் துறக்கத் தூண்டும் கீதோபதேசத்தில், கிருஷ்ண பகவான், ''நான் தர்மத்துக்கு எதிராக இல்லாத காமமாக இருக்கிறேன்!'' என்று குறிப்பிடுகிறார்.

தர்மத்துக்கு எதிராக இல்லாத, தூய்மையான அன்பும் உத்தமமான உறவும் இல்வாழ்க்கையில்தான் கிடைக்கிறது. இப்படிப்பட்ட தர்ம மிகுந்த பிரேமை தெய்வீகமானது. இதையே பகவத்கீதை உத்தமமானது என்று கருதி ஒப்புதலும் அளிக்கிறது.

ஆகையால் கணவன்-மனைவியரிடம் நிலவும் பிரேமை சாஸ்திர சம்மதம் கொண்ட உத்தமமான பண்பாகும். இதை இந்துமதம் மறுக்கவே இல்லை. பகவானின் அருள்மொழியாவே வெளிப்படுகிறது.

பெண்களை வீட்டிலும் சமூக வாழ்க்கையிலும் மிக உயர்ந்த நிலையிலும், பொறுப்பான இடத்திலும் இந்துமதம் வைத்திருக்கிறது. இன்று மேலை நாடுகளில் பெண்களுக்குக் கிடைக்கும் அந்தஸ்தை, அதன் குறைப்பாடுகள் ஏதும் இன்றி, அன்றே நமது சாத்திர நூல்கள் வகுத்துக் கொடுத்திருக்கின்றன. இதிகாசங்களிலும் பெண்களுடைய மேன்மையான பண்புகள் மிக உயர்வாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

ஆகவே, இந்துமதத்தில் பெண்களுக்கு உரிய மதிப்பும் மரியாதையும் சரியாக அளிக்கப்படவில்லை என்ற கருத்து தவறானதாகும்.

● மனம் சோர்ந்து போனால் நீங்கள் இதுவரை பெற்ற வெற்றிகளை நினைத்துப் பாருங்கள். உங்கள் நண்பர்கள் உங்களைப் பாராட்டிய அம்சங்களை நினைவிற்குக் கொண்டு வாருங்கள். தளர்ந்துபோய் விடாதீர்கள்! நாம் எழுந்து எழுந்து உறுதியுடன் எடுத்துவைக்கும் முயற்சிகளில்தான் நம்பிக்கையும், வெற்றியும் உள்ளன.

— ஜேம்ஸ் ஆலன்.

## இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்கள விற்பனை கருமபீடம்

இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் அண்மையில் மாண்புமிகு இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட விற்பனைக் கரும பீடத்தில் உள்ள நூல்களும் ஆலய உபயோகத்திற்கான பொருட்கள் என்பவற்றின் விபரமும் கீழே தரப்பட்டுள்ளன. இவற்றை சனி. ஞாயிறு தவிர்ந்த ஏனைய வேலை நாட்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை மேற்படி திணைக்கள கரும பீடத்தில் பெற்றுக்கொள்ளலாம். ஆர்வமுள்ள இந்துசமய அபிமானிகள் இந்நூல்களையும், பொருட்களையும் கொள்வனவு செய்வதன் மூலம் இந்துசமய திணைக்களத்தின் மேலான செயற்பாடுகளுக்கு ஊக்கம் கொடுத்தவர்களாவார்கள்.

## இந்துமத நூல்களின் விலை விபரம்

| | | |
|---|---|---|
| 1 | மூவர் தேவாரம் | 650.00 |
| 2 | இந்துக் கலைக் களஞ்சியம் | 250.00 |
| 3 | அமுது கலசம் | 250.00 |
| 4 | Essential of Hinduism | 150.00 |
| 5 | இலங்கைத் திருநாட்டின் இந்துக் கோயில்கள் | 125.00 |
| 6 | அகில உலக இந்துமகா நாட்டு மலர் | 125.00 |
| 7 | மட்டக்களப்பு மாவட்ட திருத்தலங்கள் | 125.00 |
| 8 | திருகோணமலை மாவட்டத் திருத்தலங்கள் | 125.00 |
| 9 | பகவத்கீதை ஆங்கிலம் | 100.00 |
| 10 | முருகவேளின் பன்னிரு திருமுறைகள் | 100.00 |
| 11 | மதங்க சூளாமணி | 100.00 |
| 12 | Study of Translation | 100.00 |
| 13 | மட்டக்களப்பு ஆரையம்பதி ஸ்ரீ பரமநயினார் சுவாமிகள் | 50.00 |
| 14 | கதிர்காமம் பிள்ளைத்தமிழ் | 25.00 |
| 15 | மண்டூர் பிள்ளைத்தமிழ் | 25.00 |
| 16 | Satkuru Yohaswami | 20.00 |
| 17 | யோகசுவாமி | 20.00 |
| 18 | உடப்பு ஸ்ரீ அம்பாள் வரலாற்று நூல் | 20.00 |
| 19 | ஆரையூர்க் கோவை | 20.00 |
| 20 | பரமகம்ஷர் கூறிய பக்திக் கதைகள் | 15.00 |
| 21 | இராமாயணக் குட்டிக் கதைகள் | 10.00 |
| 22 | ஔவையார் அறிவுச் செல்வங்கள் | 10.00 |
| 23 | ஆலயமணி | 07.00 |
| 24 | கோபுரம் | 07.00 |
| 25 | ஸ்ரீ நீதிராஜசர்மா அவர்களால் இயற்றிப் பாடிய பக்திப் பாடல்களின் ஒலிப்பதிவு நாடா | 75.00 |

*With Best Compliments*

*of*

# RENUKA INDUSTRIES

**IMPORTERS & EXPORTERS**

MANUFACTURERS IN ALL KINDS OF

ALUMINIUM WARES

**170 - 172 OLD MOOR STREET COLOMBO-12**

Telephone: **35579**

இப்பத்திரிகை கொழும்பு இந்துகலாசார மன்றத்திற்காக கொள்ளுப்பிட்டி, நெல்சன் ஒழுங்கை 39/2ம் இலக்க இல்லத்தில் வசிப்பவரும் இதன் ஆசிரியருமான திரு. ஏ. எம். துரைசாமி என்பவரால், கொழும்பு-13 ஜெம்பட்டா வீதி 149-பி ஒஸ்கா எண்டர்பிரைஸஸில் 22-10-1990ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.